அட்டவணை 1.31

**அரச தனியார்துறைகளின் தொழில்நிலை மதிப்பீடுகள்**

| ஆண்டு | அரச | | தனியார் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | அரச | அரசுசார் | கொழும்பு பெரும் பாகப் பொருளாதார ஆணைக்குழு | வனையவை * | |
| 1977 | 422,647 | 617,033 | — | 283,427 | 1,323,107 |
| 1978 | 446,085 | 681,034 | 261 | 321,690 | 1.449,070 |
| 1979 | 470,188 | 749,034 | 5,876 | 310,096 | 1,535,194 |
| 1980 | 476,086 | 769,122 | 10,538 | 348,597 | 1,604,343 |
| 1981 | 481,475 | 778,199 | 19,729 | 348,365 | 1,627,768 |
| 1982 | 484,802 | 784,370 | 24,926 | 320,753 | 1,614,851 |
| 1983 | 489,472 | 785,717 | 28,705 | வி.கி. | வி.கி. |

* ஊழியர் சேமநிதித்தரவுகளின் அடிப்படையில்

மூலங்கள்: கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு. இலங்கை மத்திய வங்கி.

நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார அளவீடுகளிலிருந்தும் பெறப்பட்ட தொழில் வாய்ப்பு உருவாக்கல் சூழ் நிலையின் குறிகாட்டி தொழிலின்மை வீதம் 1978/79 இல் 14.8 சதவீதத்திலிருந்து 1981/82 இல் 11.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றமையைக் காட்டுகின்றது. தொழிலின்மையின் இவ்வீதம் அண்மைய பத்தாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த வீதமாக இருக்கின்றது.

## விலைகள்


1983 ஆம் ஆண்டில் விலை நடத்தையின் முதன்மைப் பண்பு யாதெனில் கடந்த இரண்டாண்டுகளில் விலைகளில் நிலவிய கீழ் நோக்கிய போக்கு மாற்றமடைந்தமையேயாகும். இக்காலத்தில் சில்லறை மட்டத்திலும் அதேபோன்று முதன்மைச் சந்தை மட்டத்திலும் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் உயர்வு காணப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிப் போக்கில் ஏற்பட்ட இடமாற்றம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் அதே போன்று மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணிலும் அவதானிக்கப்பட்டது. 1983 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பு வீதமாக 1982 ஆம் ஆண்டின் 10.8 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14 சதவீதமாக அமைந்திருந்தது. மத்திய வங்கியின் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட இது தொடர்பான அதிகரிப்பு 1982 ஆம் ஆண்டின் 5.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983 இல் 25 சதவீதமாக இருந்தது. எனினும், 1983 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 1980, 1981 ஆம் ஆண்டுகளில் அதிகரிப்பு வீதங்களைவிடக் குறைவாகவே இருந்தது.

## மொத்த விற்பனே விலேச் சுட்டெண்

*1974 = 100*

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

1983 ஆம் ஆண்டின் விலை மட்டங்களில் ஏற்பட்ட உயர்ந்த வீத அதிகரிப்பிற்கு பல காரணிகளின் இணைந்த விளைவே காரணமாகும். ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு இப்பண்டங்களின் உள்நாட்டுச் சந்தை விலைகளிலும் அதிகரிப்புக்களை ஏற்படுத்தின. மொத்த விற்பனை புகையிலை வரிகள் மீதான மேல்நோக்கிய திருத்தம் அதிகரித்த போக்குவரத்துக் கட்டணங்கள் இன்றியமையாத நுகர்வுப் பொருட்களில் முக்கியமாக மண்ணெண்ணெயின் விலையில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தம் போன்றன விலை மட்டங்களில் உயர்வு ஏற்பட உதவிய முக்கிய காரணிகளுள் சிலவாகும்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் துணைச் சுட்டெண்கள் அனைத்தும் பெரும்பாலும் அதிகரித்தன. சுட்டெண்ணின் பெரும் பங்கினைக் (61.9 சதவீதம்) கொண்டிருக்கும் உணவுத் தொகுதிக்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 12.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பு முழுச் சுட்டெண்ணிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாண்டின் தொடக்கப் பகுதியில் மா, பாண் ஆகியவற்றின் விலைகளில் செய்யப்பட்ட மேல்நோக்கிய திருத்தமும், குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் தேங்காய், தேங்காய் எண்ணெயின் விலைகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அதிகரிப்பும் சுட்டெண்ணில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தின.

ஆண்டுக் காலத்தில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்புக்கள் 33.2 சதவீதத்தால் உயர்ந்த எரிபொருள், வெளிச்சத்திற்கான துணைச் சுட்டெண்ணில் தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி முழுமையான சுட்டெண்ணிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. பல்வகைத் தொகுதிக்கான துணைச் சுட்டெண்ணும் 15 சதவீதத்தால் அதிகரித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்றுமதித் துறைக்கான துணைச் சுட்டெண் 44 சதவீதத்தால் மிக அதிகளவில் உயர்ந்தது. அதேவேளை உள்நாட்டு, இறக்குமதித் துறைகளுக்கான சுட்டெண்கள் முறையே 12.8 சதவீதத்தாலும் 9.5 சதவீதத்தாலும் அதிகரித்தன.

ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இவ்வாண்டுக் காலத்தில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணில் பெரும் அதிகரிப்பு ஏற்படக் காரணமாயிற்று. ஏற்றுமதித் துறைக்கான துணைச் சுட்டெண் 67.6 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்தது. தேயிலையின் அனைத்து வகைகளினதும் (மூன்று உயர வகைகளினதும்) ஆண்டுச் சராசரி விலைகள் முன்னைய ஆண்டின் விலையினை விட 84.6 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டில் குறிப்பாக பிற்பகுதியில் தேங்காய், தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் விலைகளில் இதே மாதிரியான அதிகரிப்புக்கள் காணப்பட்டதுடன் இறப்பர் ஏலக்காய் போன்ற ஏனைய ஏற்றுமதி விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்வுகளும் இவ்வதிகரிப்பிற்கு உதவின.

உள்ளூர் இறக்குமதித் துறைகளுக்கான சுட்டெண்கள் முறையே 5.9 சதவீதத்தாலும் 10.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. உள்நாட்டு விலைகள் 1982ஆம் ஆண்டிலும் பார்க்க மெதுவாக அதிகரித்த வேளையில் துணைச் சுட்டெண்கள் 10.4 சத

வீதத்தால் அதிகரித்தன. அதிகரித்த நெல்விலைகள் இவ்வாண்டின் அதிகரிப்புக்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவியதெனினும் ஏனைய பல உள்ளூர்விலைகள் சார்பு ரீதியில் நிலையாகவே இருந்தன.

மீளாய்வுக்குரிய ஆண்டுப்பகுதியில் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணி லுள்ள பெரும்பாலும் அனைத்து தொகுதிகளுக்குமான துணைச் சுட்டெண்கள் அதி கரித்துள்ளன. எனினும் உணவு (30 சதவீதம்) பெற்றோலிய உற்பத்திகள் (28.6 சதவீதம்) போக்கு வரத்துக் கருவி (25.1 சதவீதம்) பல்வகைத் தொகுதிகள் (22.4 சதவீதம்) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் ஏனைய தொகுதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களிலும் பார்க்க உயர்வாக இருந்தன. தாள் உற்பத்திகள், இரசாயன, இரசாயன உற்பத்திகள் உலோகமல்லா உற்பத்திகள், பொறிகள் ஆகியவற்றிற்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்புவீதங்கள் முறையே 17.8, 16.5, 16.3, 10.2 சதவீதங்களாக இருந்தன.

அட்டவணை 1.32

தெரிந்தெடுக்கப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விற்பனை விலைகள் 1982 — 1983

| விடயம் | அலகு | 1982 ரூபா | 1983 ரூபா | மாற்றம் 1982-83 ரூபா | சதவீத மாற்றம் 1982-83 |
|---|---|---|---|---|---|
| அரிசி ... | கி. கி. ஒன்று | 6.56 | 6.92 | 0.36 | 5 |
| உயர்நில மரக்கறி வகைகள் ... | ,, | 6.01 | 6.98 | 0.97 | 16 |
| தாழ்நில மரக்கறி வகைகள் ... | ,, | 4.48 | 5.62 | 1.14 | 25 |
| கிழங்கு வகைகள் ... | ,, | 5.60 | 6.58 | 0.98 | 18 |
| கடல் மீன் ... | ,, | 22.73 | 27.02 | 4,29 | 19 |
| இறைச்சி (மாடு, ஆடு, பன்றி, கோழி) ... | ,, | 26.54 | 30.29 | 3.75 | 14 |
| செத்தல் மிளகாய் ... | ,, | 30.02 | 32.44 | 2.42 | 8 |
| தேங்காய் ... | காய் ஒன்று | 1.57 | 2.23 | 0.66 | 42 |

மூலம்: இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறை.

நுகர்வோர், இடைநிலைத் துறைகளுக்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் முறையே 28.9 சதவீதம், 15.8 சதவீதங்களாக விளங்கியவேளை யில் முதலீட்டுப் பொருட்களுக்கான சுட்டெண் 12.9 சதவீதத்தால் உயர்ந்தது.

மத்திய வங்கியின் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின் கீழ் சேகரிக்கப் பட்ட தெரிவுசெய்யப்பட்ட உணவு விடயங்களின் சராசரி சில்லறை விலைகள்மீதான தரவுகள் 1982ஆம் ஆண்டிற்கும் 1983ஆம் ஆண்டிற்குமிடையில் பெரும்பாலான விடயங்களில் சில்லறை விலைகள் அதிகரித்தமையை எடுத்துக்காட்டின. அட்டவணை (1.32)இல் தரப்பட்டுள்ள சில தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் விலைகள் இதனை எடுத்துக்காட்டுகின்றன. அரிசி, மிளகாய் ஆகியவற்றின் விலை அதிகரிப்புக்கள் மித மாக இருந்ததெனினும் தேங்காய், தாழ்நில மரக்கறிவகைகள், மீன், இறைச்சி என்பனவற்றின் விலைகள் மிக அதிகமாக விளங்கின.

ஏனைய விடயங்களின் விலை அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் அரிசியில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் குறைவாக இருந்தன. 1982ஆம் ஆண்டிலிருந்தும் அரிசியின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதத்தில் ஒரு வீழ்ச்சி காணப்படுகின்றது. முன்னைய ஆண்டினைப்போன்றே 1983ஆம் ஆண்டிலும் அரிசியின் சில்லறை விலைகள் 5 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தன.

தாழ்நில, உயர்நில மரக்கறிகள் இரண்டினதும் விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. உயர்நில மரக்கறிகளைப் பொறுத்தவரை அவற்றின் அதிகரிப்பு வீதம் 1982 ஆம் ஆண்டினைப் போன்றே 16 சதவீதமாக இருந்தவேளையில் தாழ்நில மரக்கறிகள் 1982ஆம் ஆண்டின் 18 சதவீதத்துடனும் அதற்கு முன்னைய ஆண்டின் 9 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 25 சதவீதம் கொண்ட பெருமளவுஅதிகரிப்பை எடுத்துக்காட்டியது. இது தாழ்நில மரக்கறிகளுக்கான அதிகரித்த விலைப்போக்கினை எடுத்துக்காட்டியது.

கடல் மீன், இறைச்சி என்பவற்றில் விலைகள் அதிகளவில் அதிகரித்தபோதும் இவ்விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதங்கள் 1982ஆம் ஆண்டின் விலைகளைவிடக் குறைவாகவே இருந்தன. கடல் மீனின் விலைகள் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீதத்தால் அதிகரித்தன. இறைச்சியின் சராசரி சில்லறை விலைகள் முன்னைய ஆண்டின் 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் உயர்ந்தன. செத்தல் மிளகாயின் விலை 8 சதவீதத்தால் மிதமாக அதிகரித்தது.

42 சதவீத அதிகரிப்புப் பதிவுசெய்யப்பட்ட தேங்காயில் பெருமளவு அதிகரிப்பு விலை 1982 இற்கும் 1983 இற்கும் இடையில் அவதானிக்கப்பட்டது. இதுமுன்னைய ஆண்டில் ஏற்பட்ட 10 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறுனதாக இருக்கிறது. குறிப்பாக இறுதி இரண்டு மாதங்களிலும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தெங்கு உற்பத்திகளுக்கான உயர்ந்த ஏற்றுமதி விலைகள் ஆகியன இதன் விலைகளில் ஏற்பட்ட உயர்விற்குப் பொறுப்பாக இருந்தன.

**கூலிகள்**

1983இல் சாதாரண கூலிகள் நன்கமைந்த,நன்கமையாததுறைகள் இரண்டிலும் அதிகரித்தன. நன்கமையாத துறையில் குறிப்பாக நெல்லிலும் இறப்பரிலும் 1983இல் ஏற்பட்ட சாதாரண கூலி அதிகரிப்புக்கள் 1982 இனைவிடக் கூடுதலாக இருந்தன. நன்கமைந்ததுறையில் பணக்கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் 1982 ஆம்ஆண்டின் அளவினைவிடக் குறைவாக இருந்ததுடன் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினுல்* பிரதிபலிக்கப்பட்டவாறு விலை அதிகரிப்புக்களை ஈடுசெய்யப்போதுமானதாகவும் இருக்கவில்லை.

---

* நாட்டின் கிராமிய, பெருந்தோட்டத் துறைகளில் பெறப்பட்ட கூலிகளுக்கு கொழும்பு தொழிலாளர் வகுப்புக்களின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணில் பொருத்துவதற்கு இது பெருமளவிற்கு நம்பத்தகுந்ததாக இல்லாமையால், உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்கு நன்கமையாத துறையிலுள்ள பணக்கூலிகள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினுல் சுருக்கப்படவில்லை.